2022 மார்ச் 22] [திரு. எஸ். ரகுபதி]

குறிப்பிடாத காரணத்தாலே, சென்னை உயர் நீதிமன்றம், "நீங்கள் புதிய சட்டத்தை இயற்றிக்கொள்ளலாம்; எனவே, இந்த வழக்கை நாங்கள் தள்ளுபடி செய்கிறோம்' என்று தள்ளுபடி செய்தது. ஆனால், இதுகுறித்து அரசு வழக்கறிஞர்களை ஆலோசித்தபோது, மிகவும் strong ஆக அப்பீல் மனுவை, பதிலினை தாக்கல் செய்தால், இந்தச் சட்டத்திலேயே நாம் இதற்குத் தடை வாங்கிவிடலாம் என்கிற கருத்தைத் தெரிவித்துள்ளார்கள். நீங்கள் கொண்டு வந்த சட்டத்தை உச்ச நீதிமன்றத்தில் நிலைநிறுத்துவதற்காகத்தான் நாங்கள் இதுதொடர்பாக உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–25

எனவே, ஏழைகளுடைய வாழ்க்கையிலே விளையாடுகிற ஆன்லைன் ரம்மி சூதாட்டம் போன்ற விளையாட்டுகள் எந்தக் காலத்திலும் கூடாது. இன்றைக்கு நடைமுறையில் இருக்கின்ற சட்டங்களைக் கொண்டே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை இதுசம்பந்தமாக எடுத்து, ஏழையெளிய மக்களைக் காப்பாற்றுகிற பணியைச் செய்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இந்தச் சட்டம் நிச்சயமாகக் கொண்டுவரப்பட வேண்டிய ஒரு சட்டம். இது இன்றைக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையிலே இருக்கிற காரணத்தினாலே இதற்குமேல் அதற்குள் சென்று நாங்கள் விவாதிக்க விரும்பவில்லை. நிச்சயமாக உச்ச நீதிமன்றத்திலே நல்ல தீர்ப்பு கிடைக்கும் என்கின்ற நம்பிக்கையோடு நாம் எல்லோரும் இருப்போம்.

(ஆ) ஈரோடு மாவட்டம், பண்ணாரி–திம்பம் சாலையில் வாகனங்கள் செல்ல விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள், சுருக்கமாகப் பேசுங்கள்.

*__திரு. கே.ஏ. செங்கோட்டையன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். ஈரோடு மாவட்டம், தாளவாடி பகுதியில் விளையும் காய்கறிகள் மற்றும் உணவு தானியங்கள் தினந்தோறும் காலை, மாலை வேளைகளில் அறுவடை செய்யப்பட்டு தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. மலர்கள் அறுவடை செய்யப்பட்டு,

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2022 மார்ச் 22

சத்தியமங்கலம் மலர்ச் சந்தைக்குக் கொண்டு வந்து அங்கிருந்து மைசூர் வழியாக பெங்களூர் மற்றும் கோவை விமான நிலையத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றன. மாநிலங்களின் இணைப்புச் சாலைகளாக இருக்கின்ற பண்ணாரி முதல் திம்பம் வரையில் இருக்கின்ற சாலைக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. அதை நீக்குவதற்கான அவசியம் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை எண் 948, தமிழ்நாட்டையும் கர்நாடகத்தையும் இணைக்கும் சாலை, பெங்களூரில் தொடங்கி கோயம்புத்தூரில் முடிவடைகிறது. மேலும், இச்சாலை காரப்பள்ளம் முதல் பண்ணாரி வரை 26 கிலோ மீட்டர் சாலை, திம்பம் மலைப்பகுதி சாலையாகும். மேலும், 3.8 கிலோ மீட்டர் வனப் பகுதி ஆகும். இச்சாலை 27 கொண்டை ஊசி வளைவுகளைக் கொண்டது. இச்சாலை 7 மீட்டர் அகலம் உள்ள இருவழிச் சாலையாகவும் கனரக வாகனங்கள் அதிகம் செல்லும் சாலையாகவும் அமைந்திருக்கிறது. சாலையைக் கடந்து செல்லும் விலங்குகளின் பாதுகாப்பைக் கருதி, முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மலைப் பகுதியாக இருப்பதால் வாகனங்கள் மெதுவாகத்தான் செல்ல முடிகிறது. மேலும், தேசிய நெடுஞ்சாலை என்பதால் 17 இடங்களிலே வேகத் தடைகள் மற்றும் 8 இடங்களிலே வேக தடைக்கீற்றுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய சூழ்நிலையில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், 7-1-2019 அன்று மாவட்ட அரசிதழில் இரவு நேரத்திலே வாகனங்கள் செல்லக்கூடாது என்றும், பகல் நேரத்திலே வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்க வேண்டும் என்றும் ஓர் அறிவிப்பை வெளியிட்டிருந்தார்கள். இந்த நிலையில் திரு. எஸ். மனோஜ் இமானுவேல் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தின் Madurai Bench-ல் W.P. No. 19701/2020, W.P. No. 19652/2020, W.P. No. 822/2021, W.P. No. 23901/2018-ன்கீழ் வழக்குகளைத் தொடர்ந்திருக்கிறார்.

28-1-2022 அன்று காணொலிக்காட்சி மூலமாக வழக்கு விசாரணைக்கு வந்தது. அரசு முதன்மைச் செயலாளர்,

2022 மார்ச் 22] [திரு. எ.வ. வேலு]

நெடுஞ்சாலைத் துறை, ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர், கோபிச்செட்டிப்பாளையம் கோட்டப் பொறியாளர் ஆகியோர் காணொலிக்காட்சிகள் மூலமாக அதிலே கலந்துகொண்டார்கள். மற்றொரு writ *மனு* W.P. No. *1830/2022, 8–2–2022 அன்றுதான் விசாரணைக்கு வந்தது. 7–1–2019 அன்றைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவிப்பை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு ஒன்றை வழங்கியிருக்கிறது.*

இந்த நிலையில், லாரி உரிமையாளர்கள் சங்கம், ஓட்டுநர்கள் சங்கம், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் நீதிமன்ற உத்தரவை அமல்படுத்த வேண்டாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே முறையிட்டார்கள். Dhimbam Forest*-ல் ஓர் இரவில் நிற்கிற வண்டிகள், அதாவது மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை எத்தனை வண்டிகள் நிற்கின்றன என்று சொன்னால், ஏறத்தாழ 3,160 வண்டிகள் நின்று விடுகின்றன. இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது. இந்தச் சூழ்நிலையில் விவசாயிகள், பொதுமக்கள் சார்பில் மேலும் இரண்டு வழக்குகளைத் தொடர்ந்தார்கள். 5–3–2022 அன்று தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலே மாலை 6 மணி முதல் காலை 5 மணி வரை சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் வழியாக ஆறு சக்கரங்களுக்கு மேலான, அதிகமான சுமை ஏற்றக்கூடிய* Taurus *வண்டி, வாகனங்கள் செல்லக்கூடாது எனவும், மருத்துவ அவசர ஊர்தி தடையின்றிச் செல்லவும், வனப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் தடையின்றிச் செல்லவும், பழங்கள் காய்கறிகள், பால், உணவுப் பொருள்களை எடுத்துச் செல்லலாம் எனவும், நெடுஞ்சாலை அமைச்சகத்தின் அனுமதி பெற்றபின்புதான் நுழைவுக் கட்டணத்தை வசூலிக்கலாம் எனவும், எப்போது சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனவும், மலைப் பகுதியிலே வன விலங்குகள் நடமாட்டம் உள்ள பகுதிகளிலே விதிமுறைகளுக்கேற்ப வேகத்தடை அமைக்கப்பட வேண்டும் எனவும், இந்த அடிப்படையில் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்ட கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.*

முற்பகல் 11–30

அதற்குப் பின்னால், இதனையொட்டி மூன்று மனுதாரர்கள், பொது மக்களின் ஆலோசனைகள் பெறப்பட்டு, பொது மக்கள்

பாதிக்கப்படாமல், போக்குவரத்து தடையின்றிச் செல்ல வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசின் சார்பாக 10-3-2022 அன்று உயர் நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. அதன் விளைவாக இந்த வழக்கு 15-3-2022 அன்று விசாரணைக்கு வந்தது. விசாரணைக்குப் பின் உத்தரவுக்காக வழக்கு இப்போது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இதில் என்ன வேடிக்கையென்று சொன்னால், இங்கே இந்த அவைக்கு கவன ஈர்ப்பைக் கொண்டு வந்திருக்கிற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் அமைச்சராக இருந்தபோதுதான், இந்த ஆணையை அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் போட்டிருக்கிறார்கள். இப்போது கொண்டு வந்த இந்த விஷயத்தை, அப்போதே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று இந்த ஆணையைப் போடாமல் இருந்தீர்களென்றால், இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. இருந்தாலும், அரசின் சார்பாக மக்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்பதிலே நம்முடைய அரசு இன்றைக்குக் கவனமாக இருக்கிறது. உயர் நீதிமன்ற வழக்கு விசாரணைக்குத் தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, எங்களுடைய ஆட்சியிலேதான் அது நடைபெற்றது என்று சொன்னார்கள். 2019-ல் ஆணையிடப்பட்டது உண்மைதான். இருந்தாலும்கூட, எங்களுடைய ஆட்சியில் தொடர்ந்து, வாகனங்களை இயக்குவதற்கு அன்றையதினம் முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு பணிகள் நிறைவேற்றப்பட்டன. இப்போது உயர் நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்கின் காரணமாகத்தான் அது தடை செய்யப்பட்டிருக்கிறது. வருகிற 24 ஆம் தேதியன்று உயர் நீதிமன்றத்தில் அதற்கான விளக்கங்களை கேட்டிருக்கின்றார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் முன்பு போடப்பட்ட ஆணையை மாற்றி, இந்த வாகனங்களை எப்படி இயக்கலாம் என்பது குறித்த விவரங்களை உயர் நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டியிருக்கிறது. ஆகவே, அப்படி அனுப்பினால் மட்டும்தான். . .

2022 மார்ச் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டு உரையை முடியுங்கள்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லி விடுகிறேன். ஒரு நிமிடம். அப்படி அனுப்பினால்தான் அந்த வாகனங்களை நம்மால் இயக்க முடியும். மற்றொன்று, அங்கே நடைமுறையில் இருக்கின்றது. அங்கே பொது மக்கள் இரவு நேரங்களில் வருகின்றபோது அடையாள அட்டையைக் காட்ட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி அடையாள அட்டையைக் காட்டாமல் பொது மக்கள் அங்கே வர இயலாது. அதுபோன்ற நிலை இல்லாமல், உங்கள் ஆணை தெளிவாக இருக்க வேண்டும்.* Container *என்று சொல்லப்படுகிற வாகனங்களைத் தவிர, மற்ற அனைத்து வாகனங்களையும் இயக்குவதற்கும், பொது மக்கள் அங்கே தடையில்லாமல் வந்து செல்வதற்கும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்கேற்ப கடிதங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக உயர் நீதிமன்றத்திற்கு அனுப்புவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதே பதில் தான்; ஏற்கெனவே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்னொரு முறை பதிவு செய்யச் சொல்லிவிடுவோம். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் எங்களுடைய அரசாங்கம். நாங்கள் தலைமையேற்றிருக்கிற இந்த அரசாங்கம் தடை செய்ய வேண்டும் என்று ஆணை ஏதும் பிறப்பிக்கவில்லை. 7–1–2019–ல் அப்போதிருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், நீங்கள் அமைச்சராக இருந்தபோது போட்ட அந்த* order*–ஐத்தான் இப்போது நடைமுறைப்படுத்த வேண்டும் என்று உயர் நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. இதனை இந்த ஆட்சி சொல்லவில்லை; நீதிமன்றம்தான் சொல்லியிருக்கிறது. நாங்கள் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, அந்த அடிப்படையில்தான் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் கூட்டங்கள் கூட்டப்பட்டு, லாரி உரிமையாளர்கள் சங்கம், லாரி ஓட்டுநர் சங்கம், அதேபோல் பொது மக்கள் ஆகியோரை எல்லாம் அழைத்துப் பேசி, அதற்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்ற அடிப்படையில்தான் அந்தக் கூட்டம் போடப்பட்டு, கோர்ட்டுக்கு மனு போட்டிருக்கிறோம்,*

[திரு. எ.வ. வேலு] [*2022 மார்ச் 22*

இது ஒன்று. மற்றொன்று, அடையாள அட்டையைக் காட்டுவது குறித்துச் சொன்னார்கள். கிட்டத்தட்ட 50-க்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் வசிக்கிறார்கள். அவர்கள் மலைவாழ் மக்கள்தானா என்று பார்ப்பதற்காகத்தான், எப்போதாவது திடீரென்று அடையாள அட்டை கேட்கப்படுகிறது. எல்லோரையும் check *பண்ணுவதில்லை. மலைவாழ் மக்கள்தானா என்பதற்கான அடையாள அட்டையைக் காட்டுங்கள் என்று சொல்கிறார்கள். அதில் ஒன்றும் தவறு இல்லை. ஆகையால், அரசைப் பொறுத்தளவிற்கு ஏற்கெனவே நான் சொன்னதுபோல், 3,160 வண்டிகள் ஒரே* night*-ல் நிற்கின்றன. ஆக, சகஜ நிலைக்குச் செல்ல வேண்டும் என்பதுதான் இந்த ஆட்சியினுடைய கருத்து. எனவே, உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பினை நாம் எதிர்பார்க்கிறோம். அந்தத் தீர்ப்பிற்குப் பின்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(இ) நெய்வேலி, என்.எல்.சி. நிறுவனத்திற்கு நிலம் வழங்கியவர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு, உரிய இழப்பீடு மற்றும் மாற்றுக் குடியிருப்பு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.*

***திரு. ஆ. அருண்மொழிதேவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில், நெய்வேலியிலுள்ள* NLC *நிறுவனத்தின் இரண்டாவது சுரங்கம் அமைந்துள்ள இடம் மற்றும் மூன்றாவது சுரங்கம் அமையவுள்ள இடம் ஆகியவை எனது புவனகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் வருகிறது. காலங்காலமாக வாழ்ந்து வருகிற அப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள், ஏற்கெனவே இரண்டாவது சுரங்கப் பணிகளுக்காக நில எடுப்பு செய்யப்பட்டபோது,* NLC *நிறுவனத்தால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாததால், தங்களின் மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வுக்காக அறிவித்த இழப்பீடுகள் மற்றும் நிரந்தர வேலைவாய்ப்பு ஆகியவற்றிற்காக தினந்தோறும் போராடி வருகின்ற சூழ்நிலையில், இப்போது மூன்றாவது சுரங்கப் பணிகளுக்கு நில எடுப்பு நடக்கவுள்ளது என்ற அறிவிப்பு, அப்பகுதி மக்களுக்கு பெரிய அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இப்பகுதி மக்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கைகளான நிரந்தர வேலைவாய்ப்பு, நிலத்திற்கு உரிய இழப்பீடு, அவர்கள் விரும்புகிற இடத்தில் மாற்றுக் குடியிருப்பு உள்ளிட்ட கோரிக்கைகள். . .*